# இவரைத் தெரிந்துகொள்ளுங்கள்

மொழிபெயர்ப்பு: நயீம் சையத்

பிரசித்திபெற்ற முஸ்லிம் அல்லாத மாற்று மதத்தினர் பலர் அலசிப்பார்த்து, ஆராய்ந்து தன் நூல்களில் நபி பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பற்றி எழுதிய குறிப்புகளின் தொகுப்பு இது. விமர்சகர்கள் தனக்குத்தெரியாத ஒருத்தரைப்பற்றி தவறாக விமர்சிக்கும் முன் பொதுவாக அவரைப்பற்றி தெரிந்துகொள்ளும் இயல்பறிவாவது வேண்டும்.

*தம் வாய்களைக் கொண்டே அல்லாஹ்வின் ஒளியை (ஊதி) அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றார்கள் - ஆனால் காஃபிர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான். (அத்தியாயம் 9, ஸூரா தவ்பா, வசனம் 32)*

நபி பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உடைய வாழ்க்கை எந்த அளவிற்கு உன்னிப்பாக அவதானிக்கப்பட்டும் கண்காணிக்கப்பட்டும் இருக்கிறதென்றால், அவருக்கு (ஸல்) எதிராக யாரும் எந்த கதையும் எப்பொழுதும் புனைத்துக்கூற இயலாது. கடுமையான நிந்தனைகளுடன், அவதூறுகள்கொண்ட விமர்சனங்களை பரப்பி வருவோர், ஆதாரமின்றி புனைத்தும் பிணைத்தும் சாற்றப்பட்ட பொய் புகடுகள் தாமே தன் கெட்ட உள்நோக்கங்களை வெளிப்படுத்துவதை ஒரு கணம் சிந்திக்கவேண்டும்.

## இறைத்தூதரின் வாழ்க்கை :

### என்சைக்லோபெடியா பிரிட்டானிகா (Encyclopedia Brittanica) உறுதிபடுத்துவதாவது:

“முந்திய மூலங்களின் திரளான விவரங்கள் காட்டுவது என்னவென்றால், அவர் ஒரு நேர்மையானவரும் உத்தமரானவருமாக இருந்து, அதே போல் மற்ற நேர்மையானவரும் உத்தமரானவருடைய மதிப்பையும் விசுவாசத்தையும் பெற்றிருந்தார்.” (தொகுப்பு – Volume - 12)

### ஜார்ஜ் பெர்னார்ட் ஷா (George Bernard Shaw) அவரைப்பற்றி கூறுகிறார் :

அவர் மனித குலத்தின் இரட்சகனாக அழைக்கப்படவேண்டும். அவரைப்போன்றவர் நவீன உலகத்தின் சர்வாதிகாரியாக பொறுப்பேற்றுக்கொண்டால், அதன் பிரச்சினைகளை மிகவும் தேவைப்படும் அமைதியையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரும் முறையில் தீர்த்துவைப்பதில் வெற்றி பெறுவார், என நான் நம்புகிறேன். (தி ஜெனுயின் இஸ்லாம், சிங்கபூர் தொகுதி - 1, நம்பர் 8, 1936)

அவர், இது வரை பூமியில் காலடி வைத்தவர்களில் மிகவும் பிரசித்திபெற்றவர். அவர் ஒரு மதத்தை போதித்தார், ஒரு அரசை ஸ்தாபித்தார், ஒரு தேசத்தை நிறுவினார், அறநெறியை வகுத்தார், எண்ணற்ற சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார், ஒரு சக்திவாய்ந்த, ஆற்றலுடன் கூடிய சமுதாயத்தை நிலை நாட்டி, அவர்கள் பயின்று, அவருடைய போதனைகளை எடுத்துக்கூறவும், அனைத்து வருங்காலங்களுக்கும் மனிதகுலத்திற்கும் தேவையான நற்சிந்தனை, நன்னடத்தைகளை புரட்சிகரமாக மாற்றியமைத்தார்.

## அவருடைய பெயர் தான் "முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

அவர் அரேபியாவில் 570 வது ஆண்டு பிறந்தார். அவருடைய 40 வது வயதில் இஸ்லாம் (ஒரு இறைவனுக்கு சமர்ப்பிப்பு) என்ற சத்திய மார்க்கத்தை போதித்து தனது 63 வது வயதில் இவ்வுலகத்தைவிட்டு பிரிந்தார். இறை தூதராக இருந்த இந்த சொற்பமான 23 வருடங்களில் அவர் முழு அரேபிய தீபகற்பத்தையே அஞ்ஞானம், பல தெய்வ வழிபடு மற்றும் விக்ரக வழிபாட்டிலிருந்து ஒரு இறைவ வழிபாட்டிற்கும், பழங்குடி சண்டை, போர்களிலிருந்து தேசிய ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்திருக்கும் திறனுக்கும், குடிவெறி மற்றும் தீயொழுக்கத்திலிருந்து நிதானமான அமைதி நிலை மற்றும் பக்திக்கும், சட்டத்தன்மையற்ற அராஜகத்திலிருந்து ஒழுக்கமான வாழ்க்கை முறைக்கும், அப்பட்டமான நொடிப்பிலுருந்து உயர்தர தார்மீக சிறப்பிற்கும் மாற்றினார். மனிதகுல சரித்திரம் அதற்கு முன் இந்த மாதிரியான மக்கள் அல்லது இடத்தின் பூரண மாற்றத்தை என்றும் கேள்விப்பட்டதேயில்லை. அவ்வாறான அதிசயங்களை, நினைத்துப்பாருங்கள், அவை வெறும் இரண்டே தசாப்தங்களில், நடந்திருக்கின்றன.

### லாமார்டீன் என்ற ஒரு புகழ்பெற்ற சரித்திர ஆசிரியர் மனித பெருந்தன்மையின் அத்தியாவசியத்தைப்பற்றி பேசும் பொழுது, வியப்புடன் கூறுகிறார் :

ஒரு உயர்ந்த நோக்கம், சிறியதொரு வழிமுறை மற்றும் வியப்பு தரும் விளைவுகள் ஆகியவை தான் மனித மேதையின் அளவுகோலாக இருக்குமானால், எந்த புகழ்பெற்ற மனிதனையும் "முஹம்மத்" உடன் ஒப்பிட யாருக்கு தைரியம் உண்டு? மிகவும் பிரபலமானவர்கள் ஆயுதங்களையும், சட்டதிட்டங்களையும், பேரரசுகளையும் தான் உண்டாக்கினர். அவர்கள் எதாவது நிறுவினரா என்றால், அது அவர் கண்களின் முன்னிலையிலேயே சரிந்துவிட்ட பொருள் சார்ந்த சக்திகளாகத்தான் இருந்தன. இந்த மனிதரோ படைகள், சட்டங்கள், பேரரசுகள், மக்கள், மன்னர்குல வம்சங்கள் மட்டுமல்லாமல், அன்று உலகத்திலிருந்த மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகையையே அசைத்ததோடு, அதைவிட அதிகமாக, அவர் பலிபீடங்கள், கற்பக்கிரஹங்கள், தெய்வங்கள், மதங்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள் மேலும் ஆத்மாக்களையும் அசைத்துவிட்டார்... வெற்றிக்குப்பின் அவருடைய பொறுமை, ஒரே குறிக்கோளுக்காக அர்பணிக்கப்பட்டு, எம்முறையிலும் ஒரு பேரரசுக்காக ஏங்காத அவருடைய இலட்சியம், முடிவற்ற அவருடைய பிரார்த்தனைகள், இறைவனுடன் அவருடைய ஆன்மீக உரையாடல், அவருடைய மரணம், மரணத்திற்குப்பிறகும் அவருடைய வெற்றி, ஆகிய அனைத்தும் ஒரு வஞ்சகத்திற்கு அல்லாமல், மாறாக அது ஒரு சமய கோட்பாட்டை மீட்கும் ஒரு திட நம்பிக்கையின் சக்திக்கு சான்றளிக்கின்றன.

இரு முனை கொண்ட இந்த சமய கோட்பாடு, ஒன்று இறைவனின் ஒருமை மற்றொன்று பொருள் சாரா இறைவன், முந்தியது இறைவன் என்றால் என்ன என்பதும், பிந்தியது எது இறைவனில்லை என்பதும், ஒன்று போலி தெய்வங்களை வாளினால் தூக்கியெறிவதும், மற்றொன்று வாளினால் கருத்தாக்குவதுமாக இருக்கிறது. தத்துவஞானி, சொற்பொழிவாளர், உபதேசகர், சட்டவல்லுநர், போர் வீரர், கருத்துக்களை வெற்றி கொள்பவர், பகுத்தறிவு கோட்பாடுகளை மீட்பவர், உருவமற்ற வழிபாட்டினர், பூமியின் மீது 20 பேரரசுகளின் நிறுவினர், மேலும் ஒரு ஆன்மிக பேரரசு கொண்டவர், அது தான் "முஹம்மத்". எந்த உயர் நிலையைக்கொண்டு மனித மகத்துவத்தை அளந்தாலும், நாம் அழகாக கேட்கலாம் -- இவரைவிட பெரியவர் யாரேனும் உண்டா?" (Lamartine, Historire de la urquie, Paris, 1854, Vol. II pp. 276-277)

உலகம் தன் பங்கில் பல பிரசித்திபெற்ற பிரமுகர்களை கொண்டிருந்தது, ஆனால் இவர்கள் ஒருமுகமாக தன்னை ஓரிரண்டு துறைகளான சமய சிந்தனை அல்லது இராணுவ தலைமையில் மட்டும் புகழ்பெற்றவராக அறிமுகப்படுத்திக்கொள்ள முடிந்தது. இப்பிரமுகர்களின் வாழ்க்கை வரலாறும், போதனைகளும் காலப்போக்கில் நேரத்தின் மூடுபனியால் போர்தப்பட்டுவிட்டன. அத்துடன், அவர்களின் பிறந்த இடம், நேரம்,வாழ்க்கை முறை, பாணி, அவர்களுடைய போதனைகளின் தன்மை, விவரங்கள் அவர்களுடைய வெற்றி அல்லது தோல்வியின் அளவு ஆகியவை அனைத்தும் ஒரு ஊகத்திற்கு உட்பட்டுள்ளன. மேலும் அவர்களின் வாழ்க்கையையும் போதனைகளையும், மீண்டும் துல்லியமாக நிர்மாணிக்க மனிதகுலத்தால் முடியுமானதாக இல்லை.

ஆனால் இந்த மனிதர் அப்படியில்லை. முழு வெளிச்சத்துடன் மனித வரலாற்றின் மாறுபட்ட பல்வேறு மனித சிந்தனை மற்றும் நடத்தையின் துறைகளிலும் "முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நிறைவான சாதனை புரிந்துள்ளார். அவர் (ஸல்) உடைய தனிப்பட்ட வாழ்க்கை விவரங்கள் முதற்கொண்டு பொது பகிரங்க கூற்றுகள் அனைத்தும், மிக துல்லியமாக பதிவு செய்யப்பட்டு, இன்றைய தினம்வறை விசுவாசத்துடன் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அப்பதிவுகளின் நம்பகத்தன்மையை, அவரை(ஸல்) விசுவாசத்துடன் பின்பற்றுபவர் மட்டுமல்லாமல், அவருடைய(ஸல்) பாரபட்சமான விமர்சிகர்களும் திறனாய்வாளர்களும் உறுதியளிக்கின்றனர்.

"முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஒரு சமய போதகர், சமூக சீர்திருத்தவாதி, தார்மீக வழிகாட்டி, நிர்வாகத்தின் மாபெறும் உருவம், ஒரு உண்மையான நண்பர், ஒரு அதிசய தோழர், ஒரு அர்பணித்த கணவர், நேசிக்கும் தந்தை - அவர்(ஸல்) அனைத்தும் தனக்குள் இருந்தார். சரித்திர வரலாற்றில், அவருக்கு (ஸல்) ஈடாக யாரும் இருந்ததுமில்லை, அத்தனை துறைகளில் எதிலும் சிறந்து விளங்கவுமில்லை - ஆனால் தன்னலமற்ற சுபாவம் கொண்ட "முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மட்டும் தான் இவை அனைத்தையும் நம்பமுடியாத பரிபூரணத்தில் பெற்றிருந்தார்.

## யங் இந்தியா (Young India) என்ற ஏட்டில் மஹாத்மா காந்தி, "முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உடைய சிறப்பியல்பை பற்றி பேசும் பொழுது, கூறுகிறார்:

"இலட்சோப இலட்ச மனிதர்களின் மனங்களின் மீது மறுக்கமுடியாத ஆட்சி அதிகாரம் கொண்ட ஒருவருடைய சிறப்பைப்பற்றி அறிந்து கொள்ள நான் விரும்பினேன்.... வாழ்க்கையின் திட்டத்தில், இஸ்லாமுக்கு ஒரு இடத்தை வென்றது ஒரு வாளில்லை, அது திடமான எளிமை, தூதரின் அப்பட்டமான சுய பணிவு, அவருடைய தவறாத உறுதிமொழிகள், நண்பர்கள் மற்றும் பின்பற்றுபவருடன் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாடு, அவருடைய பயமற்ற உறுதியான தைரியம், தன் இறைவருட் கட்டளைப்பணியின் மீதும், இறைவனின் மீதும் அவருடைய முழு நம்பிக்கை ஆகியவை தான் என்பதை தேவைக்கு அதிகமாக நான் நம்பவைக்கப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டேன். அனைத்து தடைத்தடங்கல்களை வென்றது அவர்கள் கொண்டு சென்ற இந்த குணங்கள் தானே தவிர வாளில்லை. நான் (தூதரின் வாழ்க்கை வரலாற்றின்) இரண்டாம் பகுதியை மூடியபின், அப்பெரும் வாழ்க்கையைப்பற்றி மேற்கொண்டு படிக்க என்னிடம் ஒன்றும் இல்லையே என வருத்தப்பட்டேன்."

## "ஹீரோஸ் அண்ட் ஹீரோ ஒர்ஷிப்" (Heroes And Hero-worship) என்ற புத்தகத்தில் "தாமஸ் கார்லைல்" (Thomas Carlyle) வியந்து கூறியிருப்பதாவது :

"தன்னந்தனியாக ஒரே மனிதர் எப்படி போரிட்டுக்கொள்ளும் பழங்குடியின குலங்களையும் , நாடோடியாக அலையும் பதுாயின்களையும் (Bedouins), சக்திவாய்ந்த மற்றும் நாகரீகமான ஒரு சமுதாயமாக ஒருங்கிணைத்தார்!"

முஹம்மத் (ஸல்) அவருடைய மதத்தை வாளினால் பரப்பியதாக நிறைய சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்துவ மதம் போதனையிலும் நம்பிக்கையிலும் தானாகவே பரவியது என்று கூறிக்கொள்வது மிக சிறப்பாக இருப்பதில் சந்தேகமில்லை. இருப்பினும், அது மட்டுமல்லாமல், இது ஒரு மதத்தின் சத்தியம் அல்லது அசத்தியமாக ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டால், இதில் ஒரு அடிப்படைத்தவறு உண்டு. வாள் உண்மையிலேயே: ஆனால் உன் வாளை நீ எங்கிருந்து பெறுவாய்! ஒவ்வொரு புதுக்கருத்தும் ஆரம்பத்தில் துல்லியமாக சிறுபான்மைமிக்கதாய் இருக்கும். ஓருவருடைய தலையில் மட்டும், அது குடிகொண்டிருக்கும். முழு உலகத்தின் ஒரே ஒரு மனிதன் மட்டும் அதை நம்புவான்; அதாவது ஒரு மனிதன் அனைவருக்கும் எதிராக என்று. அதாவது, அவன் வாளை ஏந்தி அதனால் பரப்ப எண்ணினால், அது அவனுக்கு ஒன்றும் பயன் தராது.

## திவான் சன்த் ஷர்மா எழுதியதாவது :

"முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இரக்கமுள்ள உயிராக இருந்தார். அவரை சுற்றியிருந்தவர்களால் அவருடைய வசீகர சக்தி மறக்கப்படாமல், உணரப்பட்டுக்கொண்டிருந்தது." (D.C. Sharma, “The Prophets of the East “, Calcutta, 1935, pp. 12)

## எட்வார்ட் கிப்பன் மற்றும் சைமன் ஆக்லே (Edward Gibbon and Simon Ockley) இஸ்லாமிய சமய நம்பிக்கையைப்பற்றி கூறியிருப்பதாவது :

"'நான் ஒரு இறைவனையும் முஹம்மத், இறைவனின் தூதர் என்றும் நம்புகிறேன்' என்பது தான் இஸ்லாம் உடைய ஒரு எளிய, மாற்றமில்லாத உபதேசம் ஆகும். நுண்ணறிவுடைய தெய்வ உருவம் புலப்படும் எந்த விக்ரகத்தாலும் தாழ்த்தப்படவில்லை. தூதரின் கௌரவம் மனித நற்பண்புகளின் அளவை ஒருபோதும் மீறியதில்லை. சீடர்களின் நன்றியுணர்வு அவருடைய வாழ்க்கைக்கட்டளைகளால் காரண மற்றும் மத எல்லைக்குள் கட்டுப்படுத்தப்பட்டன.“ (History of the Saracen Empires, London, 1870, p.54)

"முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஒரு மனித இனத்தை விட உயர்ந்தவராகவோ தாழ்ந்தவராகவோ இருந்ததில்லை. ஆனால் அவர் மனிதகுலத்தை ஒரே ஒரு இறைவனின் பிரார்த்தனையில் ஒருங்கிணைத்து இறைவனின் கட்டளைகளின் அடிப்படையில் பண்பும் நேர்மையுமுள்ள வாழ்க்கை முறையை போதிக்கும் ஒரு புனித இறைவருட் கட்டளைப்பணியைக்கொண்ட ஒரு மனிதராக இருந்தார். அவர் எப்பொழுதும் தன்னை "ஒரு தூதனாகவும் இறைவனின் அடியேனாகவும்" வர்ணித்து வந்தார். மேலும் அவருடைய ஒவ்வொரு செயலும் அதைத்தான் பிரகடனப்படுத்தின.

**இறைவனின் முன் இருக்கும் சமத்துவ நிலையான இஸ்லாமிய அம்சத்தின் மீது பேசுகையில், புகழ்பெற்ற இந்திய பெண் கவிஞர் "சரோஜினி நாயுடு" கூறியிருப்பதாவது:**

இது தான் போதித்து தானும் நடைமுறையில் ஜனநாயகத்தை பயின்று வரும் முதலாவது மதம், ஏனெனில், தொழுகைக்கு அழைப்பு ஒலித்தவுடன், தன்னகத்தே கொண்டுள்ள இஸ்லாமிய ஜனநாயகம் நாளுக்கு ஐந்து முறை பக்தர்கள் அனைவரையும் ஒன்றுகூட வைத்து, அப்பொழுது, உழவனும் அரசனும் அருகருகே மண்டியிட்டு பிரகடனப்படுத்துவதாவது : "இறைவன் ஒருவனே உயர்ந்தவன்" .... ஒரு மனிதனை உள்ளுணர்வால், சகோதரனாக்கும் பிரிக்க முடியாத இந்த இஸ்லாமிய ஒற்றுமையால் நான் மீண்டும் மீண்டும் பிரமித்துப்போயிருக்கிறேன்." (S. Naidu, Ideals of Islam, vide Speeches & Writings, Madras, 1918, p. 169)

**பேராசிரியர் ஹர்க்ரோந்ஜே உடைய வார்த்தைகளில்:**

இஸ்லாமிய தூதரால் நிறுவப்பட்ட நாடுகளின் சங்கம், சர்வதேச ஐக்கியம் (ஒற்றுமை) மற்றும் மனித சகோதரத்துவ கொள்கைகளை சர்வலோக அஸ்திவாரத்தில் இடப்பட்டு, மற்ற நாடுகளுக்கு அது ஒரு ஒளி விளக்காக உள்ளது." அவர் தொடர்கிறார், "...உண்மை என்னவென்றால்,, நாடுகளின் சங்கம் என்ற கருத்தை அடைய இஸ்லாம் செய்த வழிவகைக்கு ஈடாக உலகத்தின் எந்த நாடும் ஒரு இணை காட்ட இயலாது.

உலகம் தெய்வீகத்தன்மைக்கு உயர தயங்கவில்லை, தனிப்பட்டவரின் வாழ்க்கைகளும், இறைப்பணிகளும் புராணத்தில் மறைந்து விட்டன. சரித்திரப்படி கூறுவோமாயின், "முஹம்மத்" நிறைவேற்றியதில் ஒரு சிறு பின்னப்பகுதியையும் இதில் எந்த புராணமும் அடையவில்லை. மேலும், அவர் பாடுபட்டதெல்லாம் மனிதகுலத்தைச் சிறப்பான அறநெறியின் கோட்பாடுகளின் மீது ஓர் இறைவனின் பிரார்த்தனைக்கு ஒருங்கிணைக்கும் ஒரே நோக்கத்திற்காகத்தான். "முஹம்மத்" (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லது அவரை பின் பற்றுபவர் யாரும், எந்நேரமும் அவர் ஒரு இறைவனின் மகன் என்றோ, இறைவனின் அவதாரம் எனவோ அல்லது தெய்வீகத்தன்மை வாய்ந்த மனிதன் என்றோ உரிமைக்கோரவில்லை -- ஆனால் அவர் எப்பொழுதும், இன்றைய தினமும், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதராகத்தான் கருதப்படுகிறார்.

**மைகேல் H ஹார்ட் (Michael H Hart) என்றவர், மனித குலத்தின் பலனுக்கும், மேம்பாட்டிற்கும் தன் பங்களித்தவர்களின் மதிப்பீட்டை புத்தகமாக பிரசுரித்து, எழுதுகிறார்:**

"உலகத்தின் மிகவும் செல்வாக்கு பெற்ற மனிதர்களின் பட்டியலில் முன்னணி வகிக்கும் "முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)" உடைய என் விருப்பத்தேர்வு பல வாசகர்களுக்கு வியப்பாகவும், மற்றவர்களால், கேள்விக்குறியாகவும் இருக்கலாம். ஆனால், அவர் மட்டும்தான் மனித சரித்திரத்தில், சமய மற்றும் மதச்சாற்பற்ற இரண்டு நிலைகளிலும் மேலான வெற்றிபெற்றவர்." (M.H. Hart, "The 100: A Ranking of the Most Influential Persons in History", New York, 1978, p. 33)

**கே எஸ் ராமகிரிஷ்ண ராவ், இந்தியாவின் தத்துவ பேராசிரியர், "முஹம்மத், இஸ்லாமிய தூதர்" என்ற தன் புத்தக கையேட்டில், தூதர் (ஸல்) அவர்களை "மனித வாழ்க்கைக்கு ஒரு பூரண மாதிரி" என குறிப்பிட்டுள்ளார்.**

பேராசிரியர் ராமகிரிஷ்ண ராவ் தன் கருத்தை விளக்கிக் கூறியிருப்பதாவது, "முஹம்மத் அவர்களின் சுபாவம், அதன் முழு உண்மையை கண்டறிவது மிகவும் கடினமாகும். வெறும் சிறு துணுக்கை மட்டும் நான் கவர முடிந்தது. என்ன வியக்கத்தக்க அடுத்தடுத்து வரும் அழகிய காட்சிகள். அங்கே முஹம்மத் ஒரு தூதர், முஹம்மத் ஒரு போர் வீரர், முஹம்மத் ஒரு தொழிலதிபர், முஹம்மத் ஒரு இராஜ தந்திரி, முஹம்மத் ஒரு சொற்பொழிவாளர், முஹம்மத் ஒரு சீர்திருத்தவாதி, முஹம்மத் ஒரு அனாதைகளின் அடைக்கலம், முஹம்மத் ஒரு அடிமைகளின் பாதுகாப்பாளர், முஹம்மத் பெண்களை விடுவிக்கும் இரட்சகர், முஹம்மத் ஒரு நீதிபதி, முஹம்மத் ஒரு சாது. அனைத்து பாத்திரங்களும் அற்புதமானவை, அத்தனை துறைகளிலும் அவரே ஒரு கதாநாயகன்."

பதினான்கு நூற்றாண்டுகள் கழிந்துவிட்ட பின்னர், இன்றைய தினமும், முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உடைய வாழ்க்கை வரலாறும், அவருடைய போதனைகளும் சிறிதளவும் இழப்போ, ஒரு மாற்றாமோ அல்லது ஒரு இடைச்செருகலோ இல்லாமல் அப்படியே பாதுகக்கப்படுகின்றன. அவைகள் மனிதகுலத்தின் பல நோய்களை குணப்படுத்தும் அழியா நம்பிக்கையை, அவர் வாழ்ந்த காலத்தில் இருந்ததைப்போலவே இன்றும் கொடுக்கின்றன. இது முஹம்மத் (ஸல்) அவர்களை பின்பற்றுவோருடைய கூற்று அல்ல, ஆனால், விமர்சிக்கும் நுட்பவுரை மற்றும் நடு நிலையான வரலாற்றினால் திணிக்கப்பட்ட தவிர்க்க முடியாத முடிவுரையாகும்.

போற்றத்தக்க R. போஸ்வொர்த் ஸ்மித் என்ற அறிஞர் 1874 வது வருடம் பிரசுரிக்கப்பட்ட "முஹம்மத் அன்ட் முஹம்மதனிஸம் என்ற தன் புத்தகத்தில் அதிசயத்தக்க விதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

“ஒரு அரசு மற்றும் சர்ச்சின் தலைவராக, அதாவது அவர் சீஸராகவும், போப்பாகவும் ஒன்றாக இருந்தார், ஆனால் அவர் ஒரு நிலையான இராணுவ அமைப்பு இல்லாமல், சொந்த பாதுகாவலர் இல்லாமல், அரண்மனையற்றவராக, நிலையான வருமானம் இல்லாமல், போப் உடைய எந்த உரிமையுமின்றி போப்பாகவும் படைகளற்ற சீஸராகவும்,இருந்தார். மனிதர்களில் யாரேனும் தான் தெய்வீக சக்தியால் ஆட்சி புரிந்ததாக சொல்லும் உரிமை கொண்டவராக இருந்திருந்தால் அது முஹம்மத் ஒருவர்தான். ஏனெனில், அவரிடம் கருவிகளின் பக்கபலமோ, ஆதரவோ, உதவியோ இருந்ததில்லை. அவர் அதிகாரத்திற்காக உடைகள் அணியவில்லை. அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையும் பொது வாழ்க்கையாகவே இருந்தது.”

மக்காஹ் நகரத்தை வென்றபின், பத்து இலட்ச சதுர மைல்களுக்கு மேலான நிலப்பரப்பு அவர் காலடியில் கிடந்தது. அரேபியாவின் அதிபதியான அவர், தன் காலணிகளையும் கரடுமுரடான கம்பளி வஸ்திரங்களையும் தானே செப்பனிட்டு அணிந்து வந்தார். ஆட்டுப்பால் கறந்தார். அடுப்படியை பெறுக்கி, தீயை மூட்டி, மற்ற அடிமைப்பாங்கான வீட்டு வேலைகளை அவரே கவனித்தார். அவருடைய இறுதிக்காலத்தில் முழு மதீனா நகரமும் செல்வத்துடன் செழித்து வளர்ந்தது. எங்கெங்கும் பொன்னும் வெள்ளியும் புழக்கத்தில் பெருகியிருந்தது. இருப்பினும் செழிப்பான அக்கால கட்டத்தில் கூட அரேபிய மன்னர் வீட்டில் வாரக்கணக்காக, அடுப்பு எரியாமலிருந்தது. பேரீச்சப்பழங்களும், தண்ணீரும் தான்

அவருடைய உணவாக இருந்தும், இரவில் உண்பதற்கு ஒன்றுமே கிடைக்காததால், அவருடைய குடும்பம் பட்டினியாக தொடர்ந்து பல இரவுகளை கழித்தது. மும்முரமான நீண்ட நாளுக்குப்பின், இரவின் பெரும் பகுதியை பிரார்த்தனைகளிலேயே கழித்து, அப்பொழுது பல தடவை தன் கடமையைச் செய்ய சக்தி அளிக்கும்படி தன்னை படைத்தவனிடம் கண்ணீர் விட்டு கதறி, அவர் மெத்தையின் மீது அல்லாமல், மர ஓலைகளால் பின்னப்பட்ட பாய் மீதே துயில் கொள்வார். அவ்வாறு பிராத்திக்கும் பொழுது அடுப்பின் மீது வைக்கப்பட்ட பானையில் சோறு கொதிப்பதைப்போன்று அருடைய அழுகை ஒலிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் இறந்த நாளன்று சில நாணயங்களே அவருடைய சொத்தாக இருந்தது, அதிலும் சில வாங்கிய கடனை திருப்பியளிக்கவும், மீதியிருந்தவை அவரை வீடு தேடி தர்மத்திற்காக வந்தவருக்கும் அளிக்கப்பட்டுவிட்டன. அவர் உயிர் பிரியும் பொழுது அணிந்திருந்த ஆடையில் பல ஒட்டுகள் இருந்தன. உலகம் முழுவதும் ஒளி பரப்பிய அவர் வீடு இருட்டாக இருந்தது, ஏனெனில், விளக்கெரிய அதில் எண்ணெயே இல்லாமலிருந்தது.

சூழ்நிலைகள் மாறின, ஆனால், இறை தூதர் மாறவில்லை. வெற்றியிலும் தோல்வியிலும், அதிகாரத்திலும், இக்கட்டான நிலையிலும், செழிப்பிலும், வறுமையிலும், அவர் ஒரே மாதிரியான, ஒரே பண்பை வெளிப்படுத்தி வந்தார். இறைவனின் அனைத்து வழிகளையும், அவனுடைய கட்டளைகளையும் போல் இறை தூதர்களும் மாற்ற முடியாதவரே.

நீங்கள் ஒரு சிந்திக்கும் அக்கறையுள்ளவராயின், குறைந்த பட்சம் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் யாதெனில், ஒரு கணம் சிந்தித்து, உங்களையே கேளுங்கள்: இப்படி அசாதாரணமான, அத்தனை சிறப்புமிக்க, மற்றும் புரட்சிகரமான அறிக்கைகள் உண்மையானவைகளாக இருக்குமா? ஒரு வேளை, அவை உண்மையாக இருந்து, முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்ற அந்த மனிதரைப்பற்றி நீங்கள் அறிமாலிருந்தால், இந்த பிரமாண்டமான அறைகூவலுக்கு பதிலளித்து, சிறிது முயற்சித்து அவரை அறிந்து கொள்ள இது நேரமில்லையா?

இதனால் உங்களுக்கு ஒரு செலவும் இருக்காது, ஆனால், இது உங்கள் வாழ்க்கையில் புது சகாப்தத்தின் தொடக்கமாக இருக்கும் என்பதை நிரூபிக்கும். பூமியின் மீது முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) போல் வேறு யாரும் என்றைக்கும் நடந்திராத இந்த ஒரு அபூர்வ மனிதரைப்பற்றி கண்டுபிடிக்க உங்களை நான் அழைக்கின்றேன்.

சாந்திப்புன்னகையுடன்